1975 நவம்பர் 5]

சென்னை கந்தசாமி திருக்கோயில்

* 202. விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கந்தசாமி ஆலயத்திற்காக புதிய தெப்பம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) மற்றும் (இ) சென்னை அருள்திரு கந்தசாமி திருக்கோயிலுக்கு இரும்பு எஃகாலான தெப்பம் ரூ. 21,121.50 செலவில் தயாரிக்கப்பட்டு சித்ரா பௌர்ணமி (25-4-1975) அன்று உற்சவம் நடத்தப்பட்டது.

அரிசனங்களுக்கு வீடுகள்

* 203. விஞ—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டு வாரியம் கும்மிடிப் பூண்டி வட்டம், புதுவாயல் காலனியில் மேற்கொண்டுள்ள வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள புதுவாயல் கிராமத்தில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் 66 வீடுகள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. இப்பணி 30-10-1975 வாக்கில் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அரிசன குடியிருப்பு வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீடுகள் கட்டப்படுவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. அடிக்கல் நாட்டு விழா நடைபெற வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு இந்த ஆண்டே வீடுகளைக் கட்டித்தர ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.